ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2416/39 - 2024 දෙසැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2024.12.27
2416/39 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: பிசெவ/காணி/4/சுவீ/எப்1/46.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2020/எச்டபிள்யூ/151.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 454, வலஸ்முல்லை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கடஸ்ரல் வரைபட இல. 830470 இல் துண்டு இல. 1 மற்றும் 2 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர்: மிரிசியன்வத்தை; விபரம்: வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை); உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: மஹாநாம ஜீகன கமகே, வீரகெட்டிய வீதி, வலஸ்முல்லை; விஸ்தீரணம்: 0.0054 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 02**
காணியின் பெயர்: மிரிசியன்வத்தை; விபரம்: வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை); உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: (காலஞ் சென்ற) தர்மபால மத்துமகே, ஒலுஉரா, வலஸ்முல்லை; விஸ்தீரணம்: 0.0111 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி மு.ப. 10.00

மணிக்கு வலஸ்முல்லை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குமுது சி. லொக்குஹேவாகம,
பிரதேச செயலாளர் ,
வலஸ்முல்லை.

பிரதேச செயலகம்,
வலஸ்முல்லை,
2024, திசெம்பர் 20.

EOG 12 - 0268

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2195/39 ஆம் இலக்க 2020.10.02 ஆந் திகதிய அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானியில் III ஆம் பகுதியில் 10 - 645 இற்கு ஏற்புடைய 7 ஆம் பிரிவின் கீழ் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் எடுத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் காணி தொடர்பிலான விபரத்தில் "திட்டப்படத்தின் இல. 61" என்பதற்குப் பதிலாக "மு.கி.ப. 71, மேலதிக இல. 4, தாள் இல. 5 ஐக் கொண்ட திட்டப்படத்தில் துண்டு இல. 61" எனத் திருத்தப்படல் வேண்டும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

எச். எம். ஹேமன்த பண்டார,
பிரதேச செயலாளர் ,
எலபாத்த.

பிரதேச செயலகம்,
எலபாத்த,
2024, திசெம்பர் 13.

EOG 12 - 0269

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: கேடீஎஸ்/கேஜீகே/4/ 2/(2)/ 2013/1/ 3.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/7/2013/HW/ 488.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 05.04.2018 ஆந் திகதிய 2065/32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் பந்தி I இன் பகுதி நீக்கப்பட்டு மற்றும் பந்தி II இல் மீள் பதிப்பிக்கப்படுகிறது எனத் திருத்தப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

பகுதி I
நீக்கப்பட்ட பகுதி

கடஸ்ரல் வரைபட இல. 320314, வலய இல. 4/5, தாள் இல. 7.

**01. துண்டு இல. 186**
காணியின் பெயர்: றம்புகேவத்தை; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி மற்றும் இரண்டு கல்லறையின் பகுதிகள் என்பன காணப்படுகின்றன; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: சஷிகா பிரியதர்ஷனி குமாரி ஜயசுந்தர மற்றும் அவிஷ்க கயான் பண்டார ஜயசுந்தர, இல. 178/2, தலாத்து ஓயா வீதி, கட்டவல, லெவுல (துண்டு இல. 12 இன் பகுதிக்கான காணி எடுத்தல் பூர்த்தி); விஸ்தீரணம்: 0.0183 ஹெக்டயார்.

பகுதி II
மீள் பதியப்பட்ட பகுதி

கடஸ்ரல் வரைபட இல. 320314, வலய இல. 4, தாள் இல. 10.

**01. துண்டு இல. 1**
காணியின் பெயர்: ரம்புகே வத்தை; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஜயசுந்தர முதியான்சேலாகே சஷிகா பிரியதர்சனி குமாரி ஜயசுந்தர; விஸ்தீரணம்: 0.0044 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 2**

காணியின் பெயர்: ரம்புகே வத்தை; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படு கின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: தம்மிக பிரியங்க பண்டார தஹனக; விஸ்தீரணம்: 0.0073 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 3**

காணியின் பெயர்: ரம்புகே வத்தை; விபரம்: தோட்டம், சீமெந்தாலான கல்லறையின் இரண்டு பகுதிகள் காணப்படுகின்றன; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஜயசுந்தர முதியான் சேலாகே அவிஷ்க கயான் பண்டார ஜயசுந்தர; விஸ்தீரணம்: 0.0066 ஹெக்டயார்.

மொஹான் தர்மதாஸ,
பிரதேச செயலாளர் ,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்ட கோரளை,
2024, திசெம்பர் 19.

EOG 12 - 0270

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் தொடர்பிலக்கம்: LD/05/2008/CB/2013.
பிரதேச செயலாளரின் தொடர்பிலக்கம்: කල්/6/කරඹ/ නිලනිවාස 02.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1669/30 ஆம் இலக்க 2010.09.03 ஆந் திகதிய வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் "நில அளவையாளர் அதிபதியின் பு 4716 மேலதிக இலக்கமும் 2010.05.31 ஆந் திகதி யிடப்பட்டதுமான வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள" என்பதானது "நில அளவையாளர் அதிபதியின் பி.பி.பு. 4716 ஆம் இலக்க 2010.05.26 ஆந் திகதிய வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள" என்றவாறாக திருத்தப்பட வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

எஸ். எம். பீ. நந்தசேன,
பிரதேச செயலாளர் (க.க.),
கல்பிட்டி.

பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2024, திசெம்பர் 09.

EOG 12 - 0271

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.